சில இடங்களிலே ஒரு லட்சத்திற்குக் குறைந்தும் வருகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் 375 என்றும் பிரிக்கப்பட்டது மத்திய அரசாங்கத்தினுல் தான் பிரிக்கவேண்டிய நிலைமை வந்தது. காரணம் அவர்கள் உதவி செய்தது. நிர்வாக சீர்திருத்தக் குழுவிடம் இந்தப் பிரச்சனைப்பற்றி ஆராயச் சொல்லியிருக்கிறேம். அதை ஆராய்ந்து எந்த முறைகளில் ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்து அமைக்கப்பட வேண்டுமென்று அறிக்கை தருகிறார்களோ அப்படி அவர்கள் அறிக்கை தந்ததிற்குப் பிறகு அந்த அறிக்கையைப் பார்த்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

மாநகராட்சி அரங்கம்

*497 வின—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு கல்வி- உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலங்குக்காட்சிசாலைக்கு அருகில், அரங்கம் ஒன்றைக் கட்டு வதற்கு அனுமதி வழங்கக்கோரி, சென்னை மாநகராட்சி, அரசுக்கு எழுதிக் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்; (அ) ஆம் (இ) 1970 ஆம் ஆண்டு சூன் திங்களில் மாநகராட்சி மன்றம், நாடகம் இசைமுதலிய பண்பாடு பற்றிய நிகழ்சிகளை நடத்துவதற்காக ஏறக்குறைய ரூபாய் பதினைந்து இலட்சம் செலவில் புதுமையானதொரு திரையரங்கம் கட்டுவதற்கான கருத்தை முன் மொழிந்தது. மாநகராட்சி மன்றம் அத்திட்டத்திற்கு நிதியளிக்கக் கூடிய நிலையில் இல்லாதிருக்கவே மன்றம் சிறப்பான நிதிநிலைமையினை யடையும்வரையில் அச்செயற்குறிப்பு தள்ளி வைக்கப்பட்டது.

பஞ்சாலைகளை நடத்த உதவித்தொகை

*498 வினு.—திரு. கே. ஏ. வகாப்.—மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) 1971 ஜூலை மாதத்தில், தமிழ்நாட்டில் மூடியுள்ள மில்களை எடுத்து நடத்த தேசீய கார்ப்பரேஷன் உதவியைக் கோரி தமிழ்நாடு அரசு, மத்திய அரசை நாடியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் மத்திய அரசின் பதில் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தேசீய பஞ்சாலை கார்ப்பரேஷன் அதன் கணக்கின்படி ஏழு மில் களுக்குக் கொடுக்கவேண்டிய உதவித் தொகையான ரூ.86·20 லட்சத்தைத் தற்சமயம் கொடுத்துவிட்டது. எடுத்த மில்களை யந்திர நவீனமாக்குதலுக்கு தேசீய கார்ப்பரேஷன் இதுவரை ரூ. 4·76 லட்சம் தான் கொடுத்துள்ளது.